பொது நிருவாக சுற்றறிக்கை : 30/2014

எனது இல–EST/08/COMPT/02/3000/11

பொது நிருவாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.
2014.12.31

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்

மாகாண பிரதம செயலாளர்கள்

திணைக்களத் தலைவர்கள்

அரசாங்கக் கூட்டுத்தாபன மற்றும் நியதிச் சட்டசபைத் தவிசாளர்கள்

**<u>தேர்தல் கடமையிலீடுபட்டிருக்கின்ற பொழுது இறப்பெய்திய அல்லது காயங்கள் போன்றவற்றிற்கு இலக்கான தேர்தல் பணியாளர்களுக்கான நட்டஈட்டுக் கொடுப்பனவுகள்.</u>**

தேர்தல்கள் ஆணையாளரினால் நடாத்தப்படுகின்ற தேர்தல்களில், தேர்தல் கடமைகளிலீடுபடுகின்ற எவரேனும் அரசாங்க / மாகாண சபை / கூட்டுத்தாபன உத்தியோகத்தரொருவரோ வேறொருவரோ அவர்,

I. தனது தேர்தல் கடமையை ஆற்றுகையில் அல்லது,

II. தேர்தல் கடமையை ஆற்றிக்கொண்டிருக்கின்ற சந்தர்ப்பமல்லாத போதிலும் தனது சாதாரண தேர்தல் கடமைகளின் விடயப்பரப்பிற்குள் வரக்கூடிய ஏதேனும் செயலொன்றை ஆற்றுகையில் அல்லது,

III. தேர்தல் கடமையை ஆற்றிய போது ஏதேனுமொரு செயலை மேற்கொண்டதன் விளைவாக அல்லது,

IV. தேர்தல் சேவை நிலையத்திலிருந்து தேர்தல் கடமை நடவடிக்கைகளிலீடுபடுவதற்காக செல்கின்ற பயணமொன்றில் அல்லது அச்சேவை நிலையத்திற்கு மீள வருகின்ற பயணமொன்றில் அல்லது,

V.

(அ) தனது வதிவிடத்திலிருந்தோ அல்லது நிரந்தர சேவை நிலையத்திலிருந்தோ தேர்தல் கடமைக்காக அறிக்கையிடுவதற்காக அச்சேவை நிலையம் வரை அல்லது

(ஆ) தேர்தல் கடமையின் பின்னர் அச்சேவை நிலையத்திலிருந்து வதிவிடம் வரை அல்லது தனது நிரந்தர சேவை நிலையம் வரை பிரயாணம் செய்கின்ற போதோ,

காயத்திற்கு உள்ளானவிடத்து அல்லது, நிரந்தர அங்கவீன நிலைமைக்கு உட்படுமிடத்து அல்லது, இறப்பெய்துமிடத்து, அவர் இறப்பெய்தினால் அவரில் தங்கி வாழ்வோருக்கு இச்சுற்றறிக்கையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறான நட்டஈட்டுத் தொகைகளைக் கொடுப்பனவு செய்ய முடியும்.

ஆயினும், அவ்வலுவலர் விபத்துக்குள்ளாகும் சந்தர்ப்பத்தில்,

i. ஏதேனுமொரு சட்டம் அல்லது திணைக்களக் கட்டளை அல்லது ஒழுங்குவிதி மீறப்படும் விதத்தில் நடந்து கொண்டிருப்பின்,

   அல்லது / மற்றும்

ii. விபத்து நடைபெற்றிருப்பது உத்தியோகத்தரும் பொறுப்புக் கூற வேண்டிய கவனயீனம் ஒன்றினாலாயின், அவருக்குக் கிடைக்க வேண்டிய நட்டஈட்டுத் தொகையில் ஏதேனும் குறைப்பொன்றை மேற்கொள்ளல் வேண்டும்.

iii. உத்தியோகத்தர் மது அருந்தியிருந்த நிலையில் காணப்பட்டிருந்தால் அவருக்கு நட்டஈட்டுக் கொடுப்பனவு வழங்கப்பட மாட்டாது.

02. காயத்திற்குள்ளாகின்ற போது கொடுப்பனவு செய்யப்படுகின்ற நட்டஈட்டுத் தொகை கணிக்கப்படுகின்ற அடிப்படை யாதெனில், அவ்வாறு காயப்படுவதனால் (உத்தியோகத்தரின் தொழிலுக்கேற்ப) அவரின் உழைக்கும் சக்தி அற்றுப் போதல் அல்லது நிரந்தரமாக உடல் விகாரத்துக்குட்படுதல் என்பவற்றின் அளவிற்கேற்பவேயாகும்.

03. நிதிசார் நட்டஈடு

I. காயத்தினால் மரணம் சம்பவித்திருப்பின் - இச்சுற்றறிக்கையின் 8 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நட்டஈட்டு சபையின் பரிந்துரைக்கமைய தேர்தல்கள் ஆணையாளரினால் உத்தியோகத்தரின் தங்கி வாழ்வோருக்கு நட்டஈடு வழங்கப்படும். உத்தியோகத்தர் இச்சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தியின் V ஆம் சந்தர்ப்பத்தின் கீழ் விபத்துகுள்ளாயின் அவர் இறுதியாகப் பெற்றுக் கொண்டிருந்த சம்பளம் போல் 150 மாதங்களுக்கான சம்பளமும், I,II,III,IV ஆம் சந்தர்ப்பங்களின் கீழ் விபத்துக்குள்ளாயின் அதுபோல் இரண்டு மடங்கிற்கு சமமான தொகையும் அதாவது 300 மாதங்களுக்கான சம்பளமும் நட்டஈடாக வழங்கப்படும்.

II. அக்காயத்தினால் நிரந்தர

அங்கவீன நிலைக்குட்படின், - இச்சுற்றறிக்கையில் 8 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நட்டஈட்டுச் சபை உரிய விபத்துத் தொடர்பான வைத்தியர் சபை அறிக்கையையும் திணைக்களப் பிரதானிகளின் பரிந்துரையையும் அடிப்படையாக வைத்து உத்தியோகத்தர் ''நிரந்தர முழு அளவிலான அங்கவீன நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளாரென'' மற்றும் நிகழ்காலத் தொழிலைப் புரிவதற்கு தகைமையற்றவரென தீர்மானிக்குமிடத்து உத்தியோகத்தருக்கு மேற்குறித்த I இல் உள்ளவாறு நட்டஈடு கொடுப்பனவு செய்யப்படும்.

III. அக்காயத்தினால் நிரந்தர பகுதியளவு

அங்கவீன நிலைக்குட்பட்டாராயின், - இச்சுற்றறிக்கையின் I ஆம் பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணைக்கமைய வைத்திய சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற உழைக்கும் சக்தி அற்றுப்போகும் சதவீதத்தை அடிப்படையாக வைத்து 60 மாதங்களுக்கான சம்பளத்தின் சதவீதத் தொகையாக இச்சுற்றறிக்கையின் 8 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நட்டஈட்டுச் சபை கொடுப்பனவு செய்ய வேண்டிய நட்டஈட்டைத் தீர்மானிக்கும். உத்தியோகத்தர் இச்சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தியின் I,II,III அல்லது IV ஆகிய சந்தர்ப்பங்களில் ஒன்றின் கீழ் விபத்துக்குள்ளாகியிருந்தால் அந்நட்டஈட்டுத் தொகை இருமடங்காகும். எவ்வாறாயினும் நோயாளி அவரது நிகழ்காலத் தொழிலுக்கு தகைமை அற்றவராகுமிடத்து, அத்தகைய நோயாளியொருவரை இந்த வகையீட்டின் கீழ் வைத்திய சபை வகைப்படுத்த மாட்டாது. மாறாக, நோயாளர் தனது நிகழ்காலத் தொழிலைப் புரிவதற்கு பொருத்தமற்றவரெனவும் அவர் '' நிரந்தர முழு அளவிலான அங்கவீன'' நிலைமைக்கு உட்பட்டுள்ளவரெனவும் அதற்குப் பதிலாக அறிக்கையிடும்.

IV. அக்காயத்தினால் தற்காலிக பகுதியளவு

அங்கவீன நிலைமைக்குட்படின் - வைத்திய சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள (தற்காலிக) உழைக்கும் சக்தி அற்றுப்போகும் சதவீதத்தின் அடிப்படையில் 15 மாதங்களுக்கான சம்பளத்தின் சதவீத

எண்ணிக்கையாக தேர்தல்கள் ஆணையாளர் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய நட்டஈட்டுத் தொகையைத் தீர்மானிப்பார். அதேபோன்று உத்தியோகத்தர் விபத்துக்குள்ளாகிருப்பது இச்சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தியின் I,II,III அல்லது IV ஆகிய சந்தர்ப்பங்களில் ஏதேனுமொரு சந்தர்ப்பத்திலாயின் நட்டஈட்டுத் தொகை 2 மடங்காகும். மேலும் வைத்திய சபையின் பரிசீலனைக்கு உட்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பத்தில் பெற்றுக் கொள்ள முடிந்த அறிக்கைகளை அடிப்படையாக வைத்து நோயாளி காயமடைந்த சந்தர்ப்பத்தில் காணப்பட்ட தற்காலிக அங்கவீன நிலைமைகளை வைத்திய சபை கருத்திலெடுக்கும்.

நோயாளியின் உழைக்கின்ற சக்தியற்றுப் போதல் அல்லது நிரந்தரமாக விகாரமடைதல் தொடர்பாக முடிவெடுப்பதற்கு பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய சபையொன்றை நியமனம் செய்வார்.

04. உத்தியோகத்தரொருவர் இறப்பெய்துமிடத்து மேற்கொள்ளப்பட வேண்டிய கொடுப்பனவுகள்.

I. அவசர தேவைப்பாடொன்றென்ற வகையில் மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலர் தேவைப்படுமிடத்து, உத்தியோகத்தரின் வதிவிடத்திற்கு சடலத்தை போக்குவரத்துச் செய்வதற்காகவும், இறுதிக் கிரியை சடங்காளர்களின் செலவினங்களை ஈடுசெய்வதற்காகவும் தேர்தல்கள் திணைக்களத்தின் செலவுத் தலைப்பிற்கு வரவு வைப்பதற்காக 40,000 ரூபா பணத்தை இறுதி சடங்கை நிறைவேற்றுகின்ற தபுதாரருக்கு / விதவைக்கு அல்லது பிள்ளைகளுக்கு / பெற்றோருக்கு அல்லது சகோதரர்களுக்கு விடுவித்தல் வேண்டும். இந்நிதி மீள அறவிட்டுக் கொள்ளப்படாத கொடுப்பனவாகும்.

II. உத்தியோகத்தர் இறப்பெய்துகின்ற போது அவர் வகித்த அல்லது தரத்திற்கு மேலே உள்ள வகுப்பொன்று அல்லது தரமொன்று காணப்படின் அல்லது தரத்திற்கு பதவியுயர்த்தப்படல் வேண்டும்.

III. விபத்துக்குள்ளானவர் அரசாங்கத் துறையின் உத்தியோகத்தரொருவராயின், அவரது வயது 55 அடையும் திகதி வரை அவருக்குரிய சம்பளங்கள், வேதன ஏற்றங்கள் மற்றும் படிகள் என்பவற்றை தங்கி வாழ்வோருக்குக் கொடுப்பனவு செய்தல் மற்றும் மேற்குறித்த II இற்கமையக் கிடைக்கப்பெற்ற பதவியுயர்வுக்குப் பின்னாலேனும் வகுப்பிலிருந்து வகுப்பிற்கு தரத்திலிருந்து தரத்திற்கு பதவியுயர்வுடன் கூடிய பதவியொன்றாயின் அப்பதவியுயர்வுகளை வழங்குவதற்காக பூர்த்தி செய்ய வேண்டிய தேவைப்பாடுகளில் காலம் தொடர்பான தேவைப்பாட்டை மாத்திரம் கருத்திலெடுத்து அப்பதவியுயர்வை வழங்கி சம்பளத்தை திருத்தியமைத்தல் உத்தியோகத்தர் பணியாற்றிய திணைக்களம் / நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

IV. தங்கியிருப்போரிடையே நட்டஈட்டுத் தொகை பகிர்ந்தளிக்கப்படும் விதம்.

(அ) வாழ்க்கைத் துணைக்கு – உரிய நட்டஈட்டுத் தொகையின் அரைவாசி

(ஆ) பிள்ளைகளுக்கு - எஞ்சியுள்ள தொகை உத்தியோகத்தரின்

தங்கி வாழ்வோராகக் கருதப்படுகின்ற பிள்ளைகளிடையே சமமாகப் பகிரப்படல் வேண்டும். அதாவது

1. 26 வயதிற்குக் குறைவான விவாகமாகாத வேலை வாய்ப்பற்ற பிள்ளைகள்.
2. 26 வயதிலும் மேற்பட்ட விவாகமாகாத வேலை வாய்ப்பற்ற மகள்மார்கள்.
3. விதவை அனாதை ஓய்வூதிய சம்பள உரித்துள்ள வகைக்குள்ள அங்கவீனப் பிள்ளைகள்.

(இ) வாழ்க்கைத் துணை உத்தியோகத்தருக்கு முன்னர் மரணித்திருந்தால் - முழு நட்டஈட்டுத் தொகையும் பிள்ளைகளிடையே சமமாகப் பகிரப்படல் வேண்டும்.

(ஈ) தங்கி வாழ்கின்ற ஒரே ஒருவர் வாழ்க்கைத் துணை மாத்திரமாயின் மொத்தத் தொகையையும் வாழ்க்கைத் துணைக்குக் கொடுப்பனவு செய்தல் வேண்டும்.

(உ) இறப்பெய்திய உத்தியோகத்தர் விவாகமாகாதவராக இருப்பின் உயிர் வாழ்கின்ற அவரின் பெற்றோர்களிடையே நட்டஈட்டுத் தொகை சமமாகப் பகிரப்படல் வேண்டுமென்பதோடு, பெற்றோர்களில் ஒருவர் இறப்பெய்தியிருப்பின் மொத்தத் தொகையை உயிர் வாழ்கின்ற தாய்க்கோ அல்லது தந்தைக்கோ வழங்குதல் வேண்டும். இருவருமே இறப்பெய்திருப்பின் உத்தியோகத்தரின் தங்கி வாழ்வோராகக் கருதப்படக்கூடிய சகோதர சகோதரிகளிடையே மொத்தத் தொகையும் சமமாகப் பகிரப்படல் வேண்டும்.

1. 26 வயதிற்கு குறைவான விவாகமாகாத வேலை வாய்ப்பற்ற சகோதர சகோதரிகள்
2. 26 வயதிற்கு மேற்பட்ட விவாகமாகாத வேலை வாய்ப்பற்ற சகோதரிகள்
3. விதவை அனாதை ஓய்வூதியச் சம்பள உரித்தான வகைக்குரிய அங்கவீன சகோதர, சகோதரிகள்

குறிப்பு :-

I. மரணமொன்று நிகழ்ந்தவுடன் உரிய மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலரினால் அது தொடர்பாக தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் மரணித்த உத்தியோகத்தரின் திணைக்கள / நிறுவன தலைவருக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

II. தெரிவத்தாட்சி அலுவலரினால் இறப்பெய்திய உத்தியோகத்தரின் மரணச் சான்றிதழை துரிதமாகப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பதோடு, அந்தச் சான்றிதழை இரண்டு வாரத்திற்குள் திணைக்கள / நிறுவனத்தின் தலைவருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

III. தெரிவத்தாட்சி அலுவலரின் அறிவித்தல் மற்றும் இறப்பெய்திய உத்தியோகத்தரின் மரணச் சான்றிதழ் திணைக்களத்தின் / நிறுவனத்தின் தலைவருக்கு கிடைக்கப் பெற்றவுடன் தேர்தல்கள் ஆணையாளரிடமிருந்து நிதி ஒதுக்கீட்டைப் பெற்றுக் கொண்டோ அல்லது நிதி ஒதுக்கீட்டை மீள் நிரப்புச் செய்து கொள்வதற்கான வேலைத் திட்டமொன்றை அவரோடு இணைந்து மேற்கொண்டோ திணைக்களத்தின் / நிறுவனத்தின் செலவு தலைப்புக்களிலிருந்தோ கொடுப்பனவு செய்தல் வேண்டும்.

05. நட்டஈட்டு ஓய்வூதியச் சம்பளம்

I. ஏற்பட்ட காயங்கள் காரணமாக இறப்பெய்துகின்ற அல்லது நிரந்தரமாக முழு அளவிலான வலுவிழப்பிற்கு உட்படுகின்ற உத்தியோகத்தர் ஒருவரின் வயது 55 ஆண்டுகளுக்குக் குறைவாயின் அவர் கற்பனையான 55 வயதில் ஓய்வு பெற்றாரெனக் கருதப்பட்டு ஓய்வூதியச் சம்பளம் கணக்கிடப்படும்.

II. அவ்வாறு இறப்பெய்திய அல்லது நிரந்தர முழு அளவிலான வலுவிழப்பிற்குட்பட்ட உத்தியோகத்தர் ஒருவரின் வயது 55 லும் அதிகமாயின் அவர் கற்பனையான 60 வயதில் ஓய்வு பெற்றவராகக் கருதப்பட்டு ஓய்வூதியச் சம்பளம் கணக்கிடப்படும். இதற்கமைய ஓய்வூதியச் சம்பளப் பிரமாணக் குறிப்பு திருத்தம் செய்யப்படும்.

06. லீவுகள்

காயத்தின் இயல்புக்கமையவும் வைத்திய சபையின் பரிந்துரைக்கிணங்கவும் தாபன விதிக்கோவையின் XII அத்தியாயத்தின் 9:1 ஆம் பிரிவின் ஏற்பாடுகளிலுள்ளவாறு லீவினைப் பெற்றுக் கொள்ள உத்தியோகத்தருக்கு அனுமதியுண்டு.

07. நட்டஈட்டுக் கொடுப்பனவை மேற்கொள்வதற்கு காரணமாகக் கொள்ளக்கூடிய சாட்சிகள்

(அ) I. காயமடைந்த உத்தியோகத்தர் உடனடியாக வைத்திய சிகிச்சைக்காக ஆற்றுப்படுத்த / ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமென்பதோடு, அது பற்றி உடனடியாக தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவித்தல் வேண்டும்.

II. அவரை வைத்திய சபை ஒன்றுக்கு முன்னால் சமுகமளிக்கச் செய்ய வேண்டுமெனத் தெரிவத்தாட்சி அலுவலரினால் பிரதேச சுகாதார சேவை பணிப்பாளரிடம் உடனடியாக கோரிக்கை விடுத்தல் வேண்டும்.

III. வைத்தியப் பரிசோதனை சபை

இச்சுற்றறிக்கையின் இரண்டாம் பிரிவின் எந்த வகையீட்டுக்கு நோயாளர் உரித்தானவராயுள்ளாரென மற்றும் / அல்லது உழைக்கும் சக்தி அற்றுப்போன

சதவீதம் மற்றும் / அல்லது உடலில் நிரந்தர விகாரமொன்றிருப்பின் அது, நோயாளியின் சாதாரணக் கடமைகளை ஆற்றுவதற்குள்ள ஆற்றல், உத்தியோகத்தருக்கு வழங்கப்பட வேண்டிய லீவுகள் என்பவற்றைக் காட்டுகின்ற தனது அறிக்கையை திணைக்களத் தலைவருக்கு அனுப்புதல் வேண்டும்.

(ஆ) சுகாதார விடயம் தொடர்பான அமைச்சின் செயலாளர் இவ்வேற்பாடுகளைப் பின்பற்றுவதற்குத் தேவையான அறிவுறுத்தல்களை உரிய அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் அறிவித்தல் வேண்டும். மேலும் நோயாளர்களின் கட்டில் நோய் அறிக்கைகள் உள்ளிட்ட அனைத்து அறிக்கைகளையும் வேறாகப் பதிவேட்டு அறையிலோ அல்லது அலுமாரியொன்றிலோ வைத்திய சபைகளின் பயன்பாட்டுக்காக எளிதில் தேடிப்பிடித்தக்கவாறு களஞ்சியப்படுத்தி வைக்குமாறு அனைத்து வைத்திய உத்தியோகத்தர்களிடமும் அவர் கேட்டுக் கொள்ளல் வேண்டும்.

(இ) விசாரணைக் குழு அறிக்கை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரினால் விபத்துத் தொடர்பான விசாரணையொன்றை நடாத்த பதவிநிலை அலுவலரொருவரின் தலைமையிலான மூவர் கொண்ட குழுவொன்றை நியமனம் செய்தல் வேண்டும். அக்குழு கீழ்வரும் தகவல்கள் உள்ளிட்ட பூரணமான விசாரணைக் குழு அறிக்கையொன்றை (குழுவின் பரிந்துரையுடன் கூடிய) தயாரித்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கு வழங்குதல் வேண்டும்.

I. உத்தியோகத்தர் கடமைக்கு வருகை தருகின்ற போது அல்லது தேர்தல் கடமையை முடித்து விட்டு மீளச் செல்கின்ற போது நிகழ்ந்த ஒரு விபத்தாயின்,

(அ) உத்தியோகத்தர் சேவை நிலையத்திற்கு சாதாரணமாக வருகை தர வேண்டிய நேரம் / வெளியேறிச் செல்ல வேண்டிய நேரம் மற்றும் வருகை தந்த / வெளியேறிய நேரம்.

(ஆ) உத்தியோகத்தர் சாதாரணமாக சேவை நிலையத்திற்கு வருகை தருகின்ற முகவரி, விபத்து நிகழ்ந்த இடத்திற்குள்ள தூரம், வருகைதந்த விதம், பிரயாணம் செய்த தூரம் மற்றும் எடுத்துள்ள நேரம். (சாதாரண பிரயாணப் பாதைக்கு வெளியிலுள்ள இடமொன்றில் விபத்து நிகழ்ந்திருப்பின் அது தொடர்பான மேலதிக தெளிவுபடுத்தல்கள் தேவை)

(இ) முடிந்த சந்தர்ப்பங்களில் உத்தியோகத்தரின் வெளிப்படுத்துகையிலும் விபத்தை நேரில் கண்டவர்களின் வெளிப்படுத்துகைகளிலும் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பான அவதானிப்புக்கள்

(ஈ) தேர்தல் தினத்திற்கு முந்திய அல்லது பிந்திய தினமொன்றில் விபத்து நிகழ்ந்திருப்பின் அந்நாட்களில் பணியாற்றுவதற்கு முன்னனுமதி பெறப்பட்டிருந்ததாவென

(உ) மோட்டார் காரொன்று / மோட்டார் சைக்கிளொன்று / வேறு வாகனமொன்று செலுத்தப்பட்டுக் கொண்டிருந்த போது விபத்து நிகழ்ந்திருப்பின், சாரதி அனுமதிப்பத்திரம், வருமான அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதிக் காப்பீட்டுப் பத்திரம் என்பன காணப்பட்டவாவென,

II. உத்தியோகத்தர் தேர்தல் கடமையிலீடுபட்டுக் கொண்டிருந்த போது நிகழ்ந்த ஒரு விபத்தாயின் அவ்வறிக்கையில் கீழ் வரும் விடயங்கள் உட்சேர்க்கப்படல் வேண்டும்.

(அ) உத்தியோகத்தர் தேர்தல் கடமைக்காக அறிக்கையிட வேண்டியிருந்த நேரமும் கடமைக்காக அறிக்கையிட்ட நேரமும்,

(ஆ) விபத்து நிகழ்ந்திருப்பது உத்தியோகத்தரின் சாதாரண தேர்தல் கடமையை ஆற்றிக் கொண்டிருந்த போதா, இன்றேல் கையளிக்கப்பட்டிருந்த விஷேட கடமையொன்றை ஆற்றிக் கொண்டிருந்த போதாவென,

(இ) முடியுமான சந்தர்ப்பங்களில் உத்தியோகத்தரின் வெளிப்படுத்துகையில் மற்றும் விபத்தை நேரில் கண்டவர்களின் வெளிப்படுத்துகைகளில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் பற்றிய அவதானிப்புக்கள்.

(ஈ) தேர்தல் தினத்திற்கு முந்திய அல்லது பிந்திய நாளொன்றில் விபத்து நிகழ்ந்திருப்பின் அத்தினங்களில் பணியாற்றுவதற்கு முன்னனுமதியைப் பெற்றிருந்தாராவென,

(உ) மோட்டார் காரொன்று / மோட்டார் சைக்கிளொன்று / வேறு வாகனமொன்று செலுத்தப்பட்டுக் கொண்டிருந்த போது விபத்து நிகழ்ந்திருப்பின், சாரதி அனுமதிப்பத்திரம், வருமான அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதிக் காப்பீட்டுப் பத்திரம் என்பன காணப்பட்டவாவென,

08. தீர்மானமெடுக்கும் அதிகாரி

மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரினால் வைத்திய சபையின் அறிக்கையையும் பொலிஸ் அறிக்கையும் விசாரணைக்குழு அறிக்கையையும் விபத்துத் தொடர்பாகவுள்ள வழக்குகள் மற்றும் ஏனைய சட்ட நடவடிக்கைகள் பற்றிய நடவடிக்கைகளும் அவரின் பரிந்துரைகள், சட்டமீறல்கள், திணைக்கள ஒழுங்குவிதிகளின் மீறல்கள் மற்றும் உத்தியோகத்தரின் அக்கறையீனம் தொடர்பான அவதானிப்புக்கள் என்பவற்றோடு பொருத்தமான ஏனைய ஆவணங்களோடு விபத்துக்குள்ளான உத்தியோகத்தர் அல்லது அவர் சார்பான தங்கி வாழ்வோரால் சமர்ப்பிக்கப்படுகின்ற நட்டஈட்டுக் கோரிக்கை என்பன தேர்தல்கள் ஆணையாளருக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேற்குறித்த 03 ஆம் பந்தியின் IV இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நட்டஈட்டுக் கொடுப்பனவு தொடர்பான தீர்மானங்கள் தேர்தல்கள் ஆணையாளரினால் எடுக்கப்படுமென்பதோடு ஏனைய அனைத்து நட்டஈட்டுக் கொடுப்பனவு தொடர்பான தீர்மானம் தேர்தல்கள் ஆணையாளர், தாபனப் பணிப்பாளர் நாயகத்தினால் நியமனம் செய்யப்பட்ட முகவரொருவர், அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தினால் நியமனம் செய்யப்பட்ட முகவரொருவர் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு சபையினாலேயே எடுக்கப்படும்.

09. திடீர் விபத்து நிகழ்ந்து ஒரு வருடத்திற்குள் நட்டஈட்டு விண்ணப்பம் தேர்தல்கள் ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அக்காலக்கெடுவிலும் பார்க்க தாமதித்து நட்டஈட்டு விண்ணப்பமொன்றில் சமர்ப்பிக்கப்படுமாயின், அத்தாமதத்திற்குக் காரணமான விடயங்கள் மற்றும் அதனை நியாயப்படுத்த முடியுமென தான் தனிப்பட்ட முறையில் திருப்தியடைவாராயின் மாத்திரம் அது பற்றி நிரூபிக்கின்ற மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரினால் அது தொடர்பான அறிக்கையொன்றோடு நட்டஈட்டு விண்ணப்பத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.

10. இச்சுற்றறிக்கை 2014.12.01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும். 1991.10.31 ஆம் திகதிய 44/91 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கை 2014.11.30 ஆம் திகதி முதல் செல்லுபடியற்றதாக்கப்படுகின்றது.

ஒப்பம்./ பீ.பி. அபேகோன்

செயலாளர்

பொது நிருவாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு

இணைப்பு-1

## I வது உப அட்டவணை

(2 (I) வது பிரிவு

**நிரந்தர பூரணமற்ற ஊனத்தை ஏற்படுத்தும் என கருத்திற் கொள்ளும் காயங்களின் பட்டியல்**

| **காயங்கள்** | **உழைக்கும் சக்தி இல்லாது போகும் விகிதாசாரம்** |
|---|---|
| நிரந்தரமான ஊணத்தை ஏற்படும் நிரந்தரமானதும் அசாத்தியமானதுமான உடல் உறுப்பு இழப்பு அல்லது காயம் | 100 |
| வேலை செய்யும் முழுமையான சக்தியை முழுமையாக இழப்பை ஏற்படுத்தும் மனநிலை பலத்தை இல்லாது போகும் அல்லது நிரந்தரமாகவே வேலை செய்யும் ஆற்றலை முழுமையான பாதிப்பினை ஏற்படுத்தும் வேறு ஏதாவதொரு காயமொன்று | 100 |

**கண்ணில் ஏற்படும் காயம்:**

| | | |
|---|---|---|
| I. | இரு கண்களினதும் பார்வையை முழுமையாக இழத்தல் | 100 |
| II. | ஒரு கண்ணின் பார்வையை முழுமையாக இழத்தல் | 50 |
| III. | ஒரு கண்ணின் பார்வையை சிறுதளவில் இழத்தல் | 25 |

**காதில் ஏற்படும் பாதிப்புக்கள்:**

| | | |
|---|---|---|
| I. | கேட்கும் சக்தியை முழுமையாக இழத்தல் | 60 |
| II. | ஒரு காதில் கேட்கும் சக்தியை முழுமையாக இழத்தல் | 30 |
| III. | ஒரு காதில் கேட்கும் சக்தியை ஓரளவு இழத்தல் | 15 |

**பேசும் சக்தியை இழத்தல்:**

| | | |
|---|---|---|
| I. | பேசும் சக்தியை முழுமையாக இழத்தல் | 75 |
| II. | பேசும் சக்தியை ஓரளவு இழத்தல் | 35 |

**புலன்களின் இழப்புக்கள்:**

| | | |
|---|---|---|
| I. | மணம் மற்றும் சுவையை உணரும் புலன்களை முழுமையாக இழத்தல் | 50 |
| II. | மணத்தை உணரும் புலனை முழுமையாக இழத்தல் | 25 |
| III. | சுவையை உணரும் புலனை முழுமையாக இழத்தல் | 25 |

**கரங்களில் காயங்கள்:**

| | | |
|---|---|---|
| I. | முழங்கை அல்லது அதற்கு மேற்பகுதியை இழத்தல் | 75 |
| II. | முழங்கை அல்லது அதற்கு கீழ்ப் பகுதியை இழத்தல் | 65 |

**கைகளில் காயங்கள்:**

| | | |
|---|---|---|
| I. | இரு கைகளையும் இழத்தல் | 100 |
| II. | ஒரு கையை அல்லது பெரு விரல் ஒன்றை மற்றும் நான்கு விரல்களையும் இழத்தல் | 65 |
| III. | பெரு விரலொன்றை (விரல் மொளி இரண்டையும்) இழத்தல் | 35 |
| IV. | பெரு விரலொன்றை (விரல் மொளி ஒன்றை) இழத்தல் | 20 |
| V. | நான்கு விரல்களை இழத்தல் | 60 |

**பெரு விரல்களின் இழப்பு:**

| | | |
|---|---|---|
| I. | மூன்று மொளிகள் | 30 |
| II. | இரண்டு மொழிகள் | 20 |
| III. | ஒரு மொளி | 10 |

**நடு, மோதி மற்றும் சின்னி விரல்களை இழத்தல்**

| | | |
|---|---|---|
| I. | விரல் மொளிகள் மூன்றும் | 20 |
| II. | விரல் மொளிகள் இரண்டு | 10 |
| III. | விரல் மொளிகள் ஒன்று | 05 |

**கால்களை இழத்தல்:**

| | | |
|---|---|---|
| I. | முழங்காலால் அல்லது அதற்கு மேல் | 75 |
| II. | முழங்காலால் அல்லது அதற்கு கீழ் | 65 |

**பாதங்களை இழத்தல்:**

| | | |
|---|---|---|
| I. | இரு பாதங்களையும் இழத்தல் | 100 |
| II. | ஒரு பாதத்தை இழத்தல் | 75 |
| III. | ஒரு பாதத்தின் செயற்பாடு ஓரளவில் இல்லாது போதல் | 35 |

**பாதங்களின் விரல்களை இழத்தல்:**

| | | |
|---|---|---|
| I. | பெரு விரல் - விரல் மொளி இரண்டும் | 20 |
| II. | பெரு விரல் - விரல் மொளி ஒன்று | 10 |
| III. | பெரு விரல் அல்லாது ஒன்றிற்கு கூடிய விரல்களை இழப்பினால் ஒவ்வொரு விரலுக்கும் | 10 |

**பல்வேறு:**

| | | |
|---|---|---|
| I. | பிறப்பு உறுப்புக்கள் முற்றாக இழத்தல் | 75 |
| II. | பிறப்பு உறுப்புக்கள் அரைவாசிக்கு இழத்தல் | 40 |
| III. | முகத்தில் பாரிய தடயங்கல் உருவாகுதல் அல்லது முகம் அவலட்சணமடைதல் | 75 |
| IV. | முகத்தில் தடயங்கள் உருவாகுதல் அல்லது முகம் அவலட்சணமரடயாது உடம்பு பாரிய அளவில் அவலட்சணம் அடைதல் - ஆகக் கூடியது | 50 |
| V. | ஒரு பல்லை இழத்தல் | 05 |
| VI. | வைத்திய அதிகாரி ஒருவரினால் மதிப்பிடப்பட வேண்டிய மேற் குறிப்பிடப்படாத ஏதாவதொரு உறுப்பிற்கு அல்லது அதனது ஒரு பகுதியை (உதா: மூக்கு, மார்புப் பகுதி, காது ஆகியவை) இழத்தல் ஆகக் கூடியது | 50 |

**குறிப்பு :**

பெற்றுக் கொள்ளக் கூடிய அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு காயம் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் நோயாளிக்கு ஏற்பட்ட தற்காலிக ஊனத் தன்மையயின் பொருட்டு 10% ஆகக் கூடிய அளவில் சிபாரிசு செய்ய முடியும்.

ஏதாவதொரு விபத்தின் போது மொத்த மதிப்பீடு 100% ஐ மிஞ்சலாகாது.

**තුවාල වන්දි/දීමනාව සඳහා අයදුම්පත**
**காயங்களுக்கான இழப்பீடு/படிக்கான விண்ணப்பம்**
**Application for Compensation/Allowance for Injuries**

1. අයදුම්කරුගේ සම්පූර්ණ නම:-
விண்ணப்பதாரியின் முழுப்பெயர்:-
Full name of the applicant:-

01.01 ජාතික හැඳුනුම්පත් අංකය:-
தேசீய அடையாள அட்டை இலக்கம்-
National Identity Card Number:-

2. ස්ථිර ලිපිනය:-
நிரந்தர முகவரி:-
Permanent Address:-

3. සේවය කරන දෙපාර්තමේන්තුව :-
சேவையாற்றும் திணைக்களம்:-
Department serving:-

4. තුවාලය සිදු වූ දිනට උසුලන තනතුර:-
காயம் ஏற்பட்ட திகதியன்று வகித்த பதவி:-
Post held as at the date on which the injury occurred:-

5. අයදුම්කරු දැනට උසුලන තනතුරෙහි ස්ථිර කරන ලද්දේ ද යන වග:-
விண்ணப்பதாரி தற்பொழுது வகிக்கும் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளாரா?
Whether the applicant has been confirmed in the post held at present:-

6. රාජකාරි ලිපිනය:-
அலுவலக முகவரி:-
Official Address:-

7. රාජකාරිය සඳහා පැමිණෙන නිවසේ ලිපිනය:-
விண்ணப்பதாரி கடமைக்கு அறிக்கையிடுவதற்கு வரும்பொழுது வசித்துவரும் முகவரி:-
Address of the residence from where the applicant reports for duty:-

8. තුවාලය/අනතුර සිදු වූ දිනය, වේලාව හා ස්ථානය:-
காயம்/ விபத்து ஏற்பட்ட திகதி, நேரம், இடம்:-
Date, time and place at which the injury/accident occurred:-

9. අනතුරෙහි ස්වභාවය:-
காயம்/ விபத்தின் தன்மை:-
Nature of the injury/accident:-

10. අනතුර සිදුවූයේ රාජකාරි කාලය අතරතුරද? රාජකාරියට පැමිණීමේදී ද? රාජකාරිය නිම වී ආපසු යාමේදී ද යන වග:-
விபத்து இடம்பெற்றது விண்ணப்பதாரி கடமையில் இருக்கும் பொழுதா? கடமைக்கு அறிக்கையிடுவதற்கு வரும் பொழுதா? அல்லது கடமையின் பின்பு திரும்பிச் செல்லும் பொழுதா?
Whether the applicant met with the whilst in duty? on the way to reporting for duty? or leaving after duty:-

11. උපන් දිනය:-
பிறந்த திகதி:-
Date of Birth:-

12. තුවාලය/අනතුර සිදු වූ දිනට අයඳුම්කරුගේ වයස:-
காயம் நிகழ்ந்த திகதியன்று விண்ணப்பதாரியின் வயது:-
Age of the applicant as at the date on which the injury occurred:-

13. අන්තිමට සේවය කළ දිනය:-
(අන්තිමට සේවය කළ දිනය හා තුවාල සිදු වූ දිනය අතර වෙනසක් තිබේ නම් පැහැදිලි කළ යුතුය)
கடமைக்கு அறிக்கையிட்ட இறுதித் திகதி:-
(கடமைக்கு அறிக்கையிட்ட திகதி மற்றும் காயம் ஏற்பட்ட திகதிக்கு இடையில் வேறுபாடு இருப்பின் தயவுசெய்து காரணத்தினை விபரிக்கவும்).
Last date of reporting for duty:-
(If there is a difference between the last date of reporting for duty and the date on which the injury occurred, please explain reasons)

ඉහත සඳහන් කරුණු සත්‍ය බව සහතික කරමි.
மேற்படி விபரங்கள் உண்மையாக உள்ளன என்று நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.
I certify that the above particulars are true.

.........................................................
අයඳුම්කරුගේ අත්සන
விண்ணப்பதாரியின் கையொப்பம்
Signature of the Applicant

**දෙපාර්තමේන්තු ප්‍රධානියාගේ වාර්තාව**

**திணைக்களத் தலைவரின் அறிக்கை**

**Report of the Head of the Department**

14. අනතුර සිදු වූ දිනය:-
காயம் ஏற்பட்ட திகதி:-
Date on which the injury occurred:-

15. වෛද්‍ය මණ්ඩලය වෙත ඉදිරිපත් කළ දිනය:-
மருத்துவர் சபைக்கு விடயம் குறித்துரைக்கப்பட்ட திகதி:-
Date on which the matter was referred to the medical board:-

16. මේ අතර වෙනසක් තිබේ නම් එයට හේතු:-
திகதிகளுக்கு இடையில் வேறுபாடு இருப்பின் காரணங்களைக் குறிப்பிடவும் :-
If there is a difference between the above dates, indicate the reasons:-

17. අනතුර සිදු වූ දින වන විට ලැබූ මාසික /දෛනික වැටුප්:-
காயம் ஏற்பட்ட திகதியில் பெறப்பட்டது மாதாந்த / நாள் கூலி:-
Obtained as at the date on which the injury occurred Monthly or daily wages:-

ඒකාබද්ධ වැටුප:-
திரட்டியது :-
Consolidated:-

විශේෂ දීමනා:-
விசேட படி:-
Special Allowance:-

(I) වන්දි ගෙවීමට අදාළ වාර්ෂික වැටුප:-
இழப்பீட்டிற்காகப் பொருத்தமான வருடாந்த வேதனம்:-
Annual Salary applicable for the compensation:-

(II) අනතුර සිදු වූ දින දක්වා ලැබිය යුතු වැටුප සහ වැටුප් වර්ධක ගෙවා තිබේද?
விபத்து ஏற்பட்ட திகதிவரை வேதனம் மற்றும் வேதன ஏற்றங்கள் வழங்கப்பட்டுள்ளதா?
Whether salaries and salary increments have been paid up to the date on which the accident occurred?

18. (I) පරීක්ෂණ නිලධාරියාගේ නිගමනය හා අනතුර සිදු වූ අයගේ සාක්ෂි ඇතුළත් මූලික පරීක්ෂණ වාර්තාව:-

විபத்தினைச் சந்தித்தநபரின் சாட்சியத்தினை உள்ளடக்கி புலனாய்வு உத்தியோகத்தரின் ஆரம்பப் புலனாய்வு அறிக்கை மற்றும் முடிவு:-

Preliminary investigation report consists of the evidence of the person faced with the accident and the conclusion of the investigation officer:-

(II) වෛද්‍ය මණ්ඩලයේ වාර්තාව:-

மருத்துவர் சபையின் அறிக்கை:-

Report of the Medical Board:-

19. ලැබූ වෛද්‍ය නිවාඩු:-

பெறப்பட்ட மருத்துவ லீவுகள்:-

Medical Leave obtained:-

20. දෙපාර්තමේන්තු ප්‍රධානියාගේ නිර්දේශය:-

திணைக்களத் தலைவரின் பரிந்துரை:-

Recommendation of the Head of the Department:-

අයඳුම්කරු තමාගේ රාජකාරි කටයුතුවල නිරතවීමේදී/රාජකාරිය සඳහා පැමිණීමේදී/රාජකාරිය නිම කර ආපසු යන ගමනේදී මෙම අනතුරට මුහුණ පා ඇති බවට සෑහීමට පත්වන බවත් ඉහත සඳහන් කරුණු නිවැරදි බවත් සහතික කරමි.

உத்தியோகத்தர் கடமையில் இருக்கும் பொழுது/ கடமைக்கு அறிக்கையிடுவதற்கு வரும் பொழுது/ கடமையின் பின்பு திரும்பிச் செல்லும் பொழுது இந்த விபத்து இடம்பெற்றது என்றும் மேலும் மேற்படி விபரங்கள் உண்மையாக உள்ளன என்றும் நான் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

I hereby certify that the officer has met with the accident whilst in his duties/ on the way to reporting for duty, or leaving after duty and further certify the above particulars are correct.

.......................................

දෙපාර්තමේන්තු ප්‍රධානියා

திணைக்களத் தலைவர்

Head of the Department

දිනය:-

திகதி:-

Date:-

වන්දි ගෙවීමේ කමිටුවේ නිර්දේශය

இழப்பீட்டுக்குழுவின் பரிந்துரை

Recommendation of the Compensation Committee